இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 23 ISSUE 10 OCTOBER-2023 | ஆண்டு சந்தா 100/- தனிப்பிரதி 10/-



# காணாமற்போன
## தொலைந்துபோனவற்றை
# கண்டுபிடியுங்கள்

இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிகை இப்பொழுது **Digital** முறையில் நம்முடைய இணையதளத்திலும்
WWW.JESUSLIVES.IN

# ISRAEL - BIBLE LAND TOUR 2024

சகோதரர் L.வின்செண்ட்ராஜ் அவர்களுடன்



## இஸ்ரேல், ஜோர்டன் & எகிப்து

## ஏப்ரல் 25 முதல் மே 6

12 -நாட்கள்

எங்களோடு வேதாகம தேசத்திற்கு வாருங்கள்



- தினமும் அதிகாலை பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னம் நிறைந்த ஆராதனை
- யோர்தான் நதிகரையில் ஆராதனை
- ஆண்டவர் இயேசு ஊழியம் செய்த இடங்கள்
- அவர் அற்புதம் செய்த பரிசுத்த ஸ்தலங்கள்
- கெத்செமனே தோட்டத்தில் ஜெப நேரங்கள்
- பத்து கற்பனைகளை பெற்ற சீனாய்மலை
- கலிலேயா கடலில் தேவனை துதித்தல்
- நைல் நதியில் படகு சவாரி

**9442800449**

தொடர்புக்கு — 9442800449, 9442800447, 9498000449.


உங்களுடைய பாஸ்போர்ட் நகலை அனுப்பி முன்பதிவு செய்து கொள்ளுங்கள்.
(சென்னையில் இருந்து புறப்பட்டு சென்னை வரும் வரை அனைத்து செலவுகளும் உட்பட)

# ஆசிரியர் மடல்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாதஇதழ் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். **ஏசாயா 43:13-ல் நான் செய்கிறதைத் தடுப்பவன் யார்? என்று சொல்லப்பட்டுள்ளது.** ஆம் தேவனுடைய காரியங்களைத் தடுக்கவோ, தடைபடுத்தவோ யாராலும் முடியாது. அவர் செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடாது. கடந்த நாட்களில் திருப்பத்தூர் பரிசுத்த உபவாச முகாமை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். வேலை நாட்களாய் இருந்தாலும் கர்த்தர் திரளான ஜனங்களைக் கூட்டிச் சேர்த்தார். மட்டுமல்ல தேவன் எல்லா ஊழியக்காரர்களையும் வல்லமையாக எடுத்துப் பயன்படுத்தினார், கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்ற தேவன் கிருபை செய்தார். அதேபோல் ஒவ்வொரு வெளியூர் கூட்டங்களையும் தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்து வருகிறார். கர்த்தருக்குச் சித்தமானால் அக்டோபர் மாதம் முழுவதிலும் பல இடங்களில் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது அதற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். வானத்தின் வாசலில் நடைபெறும் உபவாச ஜெபமும், மதுரை எழுப்புதல் உபவாச ஜெபமும் ஆசீர்வாதமாக நடைபெறுகிறது. தேவனுக்குச் சித்தமானால் சீக்கிரமாய் நம்முடைய சுவிசேஷப் பயிற்சிப் பள்ளியை ஆரம்பிக்க ஜெபித்துக் கொள்ளுங்கள். திங்கள் முதல் வெள்ளி வரை **கர்த்தாவே என்னை கைதூக்கி விடும்** என்ற நேரலை நிகழ்ச்சியும், தினமும் காலை **இயேசுவை தினம் பார்ப்போம்** என்ற நிகழ்ச்சியும், ஒவ்வொரு மாதமும் கடைசி நாள் இரவில் **நம்பிக்கையின் இரவு** என்ற நிகழ்ச்சியும் மிகுந்த ஆசீர்வாதமாக நமது யூடியூப் சேனலில் ஒளிபரப்பாகிறது. நமது மீடியா ஊழியங்களுக்காக ஜெபியுங்கள், தேவன் தகுந்த ஆட்களைக் கொடுக்க வேண்டும். அதுமட்டுமல்ல நம்முடைய ஊழியத்திற்கு இன்னும் சில கம்பியூட்டர்கள் வாங்க வேண்டியுள்ளது அதன் தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். கர்த்தருடைய கிருபையினால் மணிப்பூரில் பாதிக்கப்பட்ட சில வாலிபத்தம்பிமார்களுக்கு உதவி செய்யவும், சில வேலைகளுக்கு பயிற்சி கொடுக்கவும் கர்த்தர் கிருபை செய்தார். தொடர்ந்து நம்முடைய எல்லா ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், தாங்கவும் மறவாதிருங்கள். ஆண்டவராகிய தேவன் கூட இருந்து நம்மை ஆசீர்வதித்து, பாதுகாத்து, நடத்துவாராக.

இயேசுவின் பணியில்,

(சகோ. L. வின்சென்ட்ராஜ்)



# காணாமற்போன தொலைந்துபோனவற்றை கண்டுபிடியுங்கள்



சகோ. L. வின்சென்ட்ராஜ்

**லூக் 15:4 - ஒரு மனுஷன் நூறு ஆடுகளை உடையவனாயிருந்து, அவைகளில் ஒன்று காணாமற்போனால், தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் வனாந்தரத்திலே விட்டு, காணாமற்போன ஆட்டைக் கண்டுபிடிக்குமளவும் தேடித்திரியானோ?** என்று சொல்லப்பட்டுள்ளது. காணாமற்போன மனிதர்களைக் கண்டுபிடிக்க வந்தவர் இயேசு. இந்த அதிகாரம் முழுவதிலும் ஆண்டவராகிய இயேசு தான் இந்த பூமியில் நிறைவேற்ற வந்த தேவதிட்டத்தை இங்கு சொல்லியிருக்கிறார். இன்றைக்கு உலகில் பல விமானங்கள் விழுந்து நொறுங்கி காணாமற் போனது அதை தேடியும் இன்றைக்கு வரை மீட்க முடியவில்லை. தொலைந்தால் தொலைந்தது தான், காணாமற் போனால் காணாமற்போனது தான். ஆனால் தேவனுடைய காரியங்களில் அப்படியல்ல, அதை கண்டுபிடிக்கும் வரை, மீட்கும் வரை தேடிக் கொண்டே இருப்பார். **இயேசு சொன்னார் லூக் 19:10-ல் இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார்.** இழந்ததைத் தேட வந்த ஆண்டவராகிய தேவன் மனிதனை சிருஷ்டித்துப் படைத்து ஏதேன் தோட்டத்தில் தம்மோடு வைத்திருந்தார். நீ என்னோடு இருக்க வேண்டும், என்னை விட்டு விலகக்கூடாது, பிரியக்கூடாது என்று வைத்திருந்தார். ஆனால் சாத்தான் மனிதனை ஏமாற்றி, வஞ்சித்து தேவனிடத்திலிருந்து பிரித்து, அவர் சமூகத்திலிருந்து காணாமற்போகப் பண்ணிவிட்டான். அதனால் தான் இன்றைக்கு அநேகரை தேவ சமூகத்தில் காணமுடியவில்லை. ஜெபத்தில் பார்க்க முடிவதில்லை, பத்திரமாய், பாதுகாப்பாய் இருக்கிறவர்களை காணாமற்போகப் பண்ணி, தொலைத்து விட்டு ஒன்றும் தெரியாதவர்கள் போல இருக்கிறோம்.

சிம்சோன், தேவன் தன்னை விட்டு விலகினதை அறியாமல் இருந்தது போல இருக்கிறார்கள். அநேகம் பேருக்கு எனக்கு எல்லாம் இருக்கு, நான் நல்லா இருக்கிறேன், பத்திரமாய் இருக்கிறேன், சரியாய் இருக்கிறேன் என்ற எண்ணத்திலே எதை இழந்தோம், எதை தொலைத்தோம், எது காணாமற்போனது என்று தெரியாமல் ஓடிக்கொண்டே இருக்கிறோம். என்றைக்கு இல்லை காணாமற் போய் விட்டது, தொலைந்து போய் விட்டது, வெறுமையாய் இருக்கிறது, ஒரு நிறைவு இல்லை என்று உணருகிறோமோ அன்றைக்குத் தான் நாம் தேடவும், காணவும் ஆரம்பிப்போம். சங்கீதக்காரர் சொல்லுகிறார் **சங் 119:176-ல் காணாமற்போன ஆட்டைப் போல வழிதப்பிப் போனேன், உமது அடியேனைத் தேடுவீராக.** ஆம் வழிதப்பி நடந்து, சுயபுத்தியில் சாய்ந்து, தேவன் வைத்த இடத்தில் இல்லாமல் அவருடைய கைக்குள் அடங்கி இராமல், அவர் சமூகத்தை விட்டு விலகி வெளியே போய்க் கொண்டிருக்கிற அல்லது உலக காரியங்களுக்காக, நமது வசதி வாய்ப்புகளுக்காக விற்றுப்போட்ட ஒரு வாழ்க்கை வாழ்கிறோம்.

யோசேப்பின் வாழ்க்கையைப் பாருங்கள் அவனுடைய சகோதரர்கள் அவன் மேல் பொறாமை கொண்டு இருபது வெள்ளிக் காசுக்கு விற்றுப் போட்டார்கள். உண்மையிலே விற்றது யோசேப்பை அல்ல பரிசுத்தத்தை, அவனுக்குள் இருந்த தேவ பயத்தை, தேவ ஞானத்தைத் தான் விற்றார்கள். கடத்தி விற்றுவிட்டு தொலைத்துவிட்டு தகப்பனுக்கு கொடிய மிருகம் பீறிட்டது என்ற தவறான தகவல்களைச் சொல்லி விட்டார்கள். பஞ்சத்திலே உணவு வாங்க எகிப்திற்குப் போன போது யோசேப்பு யார் என்று தெரியாமல்

அவரிடத்தில் எங்களில் ஒருவன் காணாமற் போனான் என்று துணிகரமாய் சொல்லுகிறார்கள். **ஆதி 42:13-ல் உமது அடியாராகிய நாங்கள் பன்னிரண்டு சகோதரர், கானான் தேசத்தில் இருக்கிற ஒரு தகப்பன் புத்திரர், இளையவன் இப்பொழுது எங்கள் தகப்பனிடத்தில் இருக்கிறான், ஒருவன் காணாமற் போனான்** என்று அவரிடத்தில் துணிகரமாய் தாங்கள் தொலைத்ததை, விற்றதைச் சொல்லாமல் காணாமற் போனான் என்று சொல்லுகிறார்கள். திரும்ப அவரைத் தேடவோ, கண்டுபிடிக்கவோ அவர்கள் எந்த ஒரு முயற்சியும் எடுக்கவில்லை. காலமும், வருஷமும் தான் ஓடிக் கொண்டே இருந்தது. ஆனால் தேவன் நல்லவர், மனிதர்கள் மறந்தாலும், கைவிட்டாலும் கர்த்தர் மறக்காதவர், நம் நினைவாக இருப்பவர். அவர் நம்மைத் தேடி வந்தார், நம்மை வாழ வைத்தார், இன்றைக்கு நாம் உயிரோடு இருப்பது, நிர்மூலமாகாமல் இருப்பது அவருடைய கிருபை. அவரால் தான் நாம் வாழ்கிறோம், பிழைக்கிறோம், ஜீவிக்கிறோம்.

**எசேக் 16:4-6-ல் உன் பிறப்பின் வர்த்தமானம் என்னவென்றால், நீ பிறந்த நாளிலே உன் தொப்புள் அறுக்கப்படவு மில்லை, நீ சுத்தமாவதற்குத் தண்ணீரினால் குளிப்பாட்டப்படவுமில்லை, உப்பால் சுத்திகரிக்கப்படவுமில்லை, துணிகளில் சுற்றப்படவுமில்லை, உனக்காகக் பரிதபித்து, இவைகளில் ஒன்றையாகிலும் உனக்குச் செய்ய ஒரு கண்ணும் உன் பேரில் இரக்கமாயி ருந்ததுமில்லை. நீ பிறந்தநாளில் நீ அருவருக்கப்பட்டதினால் வெளியில் எறிந்து விடப்பட்டாய். நான் உன் அருகே கடந்து போகும் போது, மிதிக்கப்படுவதற்கு ஏதுவாய் நீ உன் இரத்தத்தில் கிடக்கிறதைக் கண்டு, உன் இரத்தத்தில் கிடக்கிற உன்னைப் பார்த்து, பிழைத்திரு என்றேன் என்றார். ஆம் சாத்தானால் தாக்கப்பட்டு லூக் 10:30 ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகையில் கள்ளர் கையில் அகப்பட்டான். அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்து கொண்டு, அவனைக் காயப்படுத்தி, குற்றுயிராக விட்டுப் போனார்கள்** மிதிக்கப்படுவதற்கு, சாவதற்கு ஏதுவாக கிடந்த நம்மை ஆண்டவராகிய இயேசு தேடி வந்து, தமது சொந்த இரத்தத்தைச் சிந்தி, நம்மை மீட்டு, தமது உயிரைக் கொடுத்து நாம் பிழைத்திருக்கவும், வாழவும் செய்திருக்கிறார். அவர் மட்டும் இந்த பூமிக்கு வரவில்லை என்றால் நாம் எப்பவோ மடிந்து மண்ணோடு மண்ணாகப் போயிருப்போம். ஆம் அவர் நம்மைத் தேடி வந்து காணாமற் போன நம்மைக் கண்டு பிடித்து இன்றைக்கும் அவர் சமூகத்தில் வாழவும், பிழைக்கவும் வைத்திருக்கிறார். நாம் அவரால் தேடி கண்டு பிடிக்கப்பட்டவர்கள், மீட்கப்பட்டவர்கள். அதனால் தான் நாம் நிர்மூலமாகாமல் உயிர் வாழ்கிறோம். அவர் சமூகத்தில் ஜெபிக்கிறோம், அவரால் வழிநடத்தப்படுகிறோம். போகட்டும் எதை மனிதர்கள் தொலைத்தார்கள், எதை தேட வேண்டும், மீட்க வேண்டும் எப்படி இழந்ததை மீட்டுக் கொள்ள வேண்டும் என்பதைப் பார்ப்போம் ஆண்டவராகிய தேவன் தாமே கண்டுபிடிக்க நமக்கு உதவி செய்வாராக.

## காணாமற்போன ஆடுகள்

**லூக் 15:4 ஒரு மனுஷன் நூறு ஆடுகளை உடையவனாயிருந்து, அவைகளில் ஒன்று காணாமற்போனால், தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் வனாந்தரத்திலே விட்டு காணாமற்போன ஆட்டைக் கண்டுபிடிக்குமளவும் தேடித்திரியானோ?** என்று சொல்லப்பட்டுள்ளது. ஆட்டுக்கு ஒரு பழக்கம் உண்டு ஆயன், மேய்ப்பன் இல்லை என்றால் அது இஷ்டத்திற்குப் போய் விடும். இஷ்டத்திற்குப் போவது பிரச்சனை அல்ல. காணாமலே, தொலைந்து கொடிய மிருகங்களுக்கு இரையாகி விடும் பாதுகாப்பில்லாத ஜீவன். ஆண்டவ-ராகிய இயேசு சொன்னார் **ஏசாயா 53:6-ல் நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம், கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்.** தேவனை விட்டுப் பிரிந்து வழி தப்பி கொடிய மிருகங்களிடத்தில் சிக்கிக் கொண்டோம். காரணம் நமக்கு மேய்ப்பன் இல்லை, ஆயன் இல்லை, நம்முடைய ஆத்துமாவை வழிநடத்த பரிசுத்த ஆவியானவர் இல்லை, கோலும் தடியும் நமக்கு இல்லை. ஆகவே கொடிய மிருகங்கள் நம்மை வேட்டையாடி நாம் பாதிக்கப்பட்டுப் போனோம். **எசேக் 34:5-8-ல் மேய்ப்பன் இல்லாததினால் அவைகள் சிதறுண்டு போயின, சிதறுண்டுபோனவைகள் காட்டு மிருகங்களுக்கெல்லாம் இரையாயின. என் ஆடுகள் சகல மலைகளிலும் உயரமான சகல மேடுகளிலும் அலையுண்டு,.......** சுற்றித் திரிந்து மேய்ப்பன் இல்லாததினால் என் ஆடுகள் காட்டு

மிருகங்களுக்கெல்லாம் இரையாயின. இப்படி வழி தப்பின ஆடுகளை காப்பாற்றவும், கண்டுபிடிக்கவும் தான் இயேசு கிறிஸ்து இந்த பூமிக்கு இறங்கி வந்தார். **எசேக் 34:16-ல் நான் காணாமற் போனதைத் தேடி, துரத்துண்டதைத் திரும்பக் கொண்டு வந்து, எலும்பு முறிந்ததைக் காயங்கட்டி பாதுகாப்பேன் என்றார்.** ஆம் நாம் அவருடைய கைகளில் உள்ள ஆடுகளாய் இருக்க வேண்டும். இல்லை என்றால் சிதறடிக்கப்-படுவோம், காணாமற்போவோம், தொலைந்து போவோம் என்று சொல்லப்பட்டுள்ளது

அதனால் தான் தாவீது சொல்லுகிறார் **கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார், நான் தாழ்ச்சியடையேன்.** ஆம் அவர் என் மேய்ப்பன், ஆயன். நாம் தாழ்ச்சியடையாதபடிக்கு, வஞ்சிக்கப்படாதபடிக்கு காணாமற்போகாதபடிக்கு அவருடைய சமூகத்தில் வாழ்ந்திருக்கிற, பிழைத்திருக்கிற ஆடுகளாய் காணப்பட வேண்டும். ஏன் தொண்ணூற்றொன்பது ஆடுகளை விட்டுவிட்டு, ஒரே ஒரு ஆட்டைத் தேடினார் என்றால் அந்த 99 ஆடுகளும் மனம் திரும்ப அவசியமில்லாத ஆடுகள். தாங்கள் செய்வது சரி, மற்றவர்கள் செய்வது சரியல்ல என்று சொல்லுகிற ஆடுகள். அதனால் தான் மனந்திரும்ப அவசியமில்லாத 99 ஆடுகளைப் பற்றி கவலைப்படாமல் மனந்திரும்புகிற ஒரு ஆட்டின் நிமித்தம் மிகுந்த சந்தோஷம் உண்டாகும் என்றார். இன்றைக்கு மனந்திரும்புகிற ஆடாய் இயேசுவுக்கு அர்ப்பணித்த ஒப்புக் கொடுக்கப்பட்ட ஆடாய் வாழும் போது தான் நாம் தேவனுடைய பார்வையில் தூக்கி விடப்படுவோம், கண்டுபிடிக்கப்படுவோம். அப்பொழுது தான் மந்தையில் சேர்க்கப்படுவோம். அவருடைய கைகளில் உள்ள ஆடுகளாய் இருப்போம், தோள்மேல் சுமத்தப்பட்ட ஆடுகளாய் இருப்போம், கண்டுபிடிக்கப்பட்ட ஆடுகளாய் இருப்போம். நாம் தொலைந்து போனவர்களாய், தேவ சமூகத்தை விட்டு ஓடினவர்களாய் கொடிய மிருகங்களின் கைகளில் அகப்பட்ட ஆடுகளாய் அல்ல, அவரே நமக்காக ஒரு ஆட்டுக் குட்டியைப் போல பூமிக்கு இறங்கி வந்தார்.

ஆபிரகாம் தன் மகன் ஈசாக்கைப் பலியிட சென்ற போது அங்கு தேவ சத்தம் உண்டாகி, உன் மகனாகிய ஈசாக்கை பலியிட வேண்டாம், உன் மகனுக்குப் பதிலாக இதோ முட்புதரில் ஒரு ஆட்டுக்குட்டி மாட்டிக் கொண்டு நிற்கிறது அதைப் பிடித்துப் பலியிடு என்றார். நமக்காக அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் பலியானார்.

**யோவான் 1:29-ல் இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி** இவரே என்று யோவான்ஸ்நானகன் சொல்லுகிறார். இன்றைக்கு அவருக்கு, ஆடுகளின் நிலமை நன்றாகத் தெரியும். கொடிய மிருகங்களின் மத்தியில், தண்ணீர் அற்ற நிலையில், மேய்ச்சல் அற்ற நிலையில் எப்படி கண்காணிக்க வேண்டும், எப்படி பாதுகாக்க வேண்டும் என்று ஒரு மேய்ப்பனாய் இருந்து கட்டாயம் தொலைந்துபோன, காணாமற்போன இந்த ஆட்டைக் கண்டு பிடித்து அவருடைய ராஜ்யத்தில் கொண்டு வந்து சேர்ப்பார். அதற்காகத் தான் அவர் உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாக வந்தார். அதைத்தான் அவருடைய சீஷர்களுக்கும் கட்டளையிட்டு அதை தேடுங்கள் என்றார். மத் 10:6-ல் காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்தில் போங்கள் என்றார். இன்றைக்கு இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதரர்களே, சகோதரிகளே நீங்கள் அவர் சமூகத்தில் தேடப்பட்ட, கண்டுபிடிக்கப்பட்ட ஆடுகளாய், அவருடைய கண்காணிப்பில் உள்ள ஆடுகளாய், தேவன் உங்களை மாற்றி, அவரால் நீங்கள் வழிநடத்தப்பட்ட, அவர் உங்களுக்கு ஆயனாக, மேய்ப்பனாக இருப்பாராக. அவர் சமூகத்தில் வாழ்கிறவர்களாக, பிழைத்திருக் கிறவர்களாக தேவன் நம்மை மாற்றுவாராக.

## காணாமற்போன வெள்ளிக்காசு

**அன்றியும், ஒரு ஸ்திரி பத்து வெள்ளிக் காசை உடையவளாயிருந்து, அதில் ஒரு வெள்ளிக்காசு காணாமற் போனால், விளக்கைக் கொளுத்தி, வீட்டைப் பெருக்கி, அதை கண்டுபிடிக்கிற வரைக்கும் ஜாக்கிரதையாய்த் தேடாமலிருப்பாளோ?, கண்டுபிடித்த பின்பு..... காணாமற்போன வெள்ளிக்காசைக் கண்டு பிடித்தேன், என்னோடுகூடச் சந்தோஷப்படுங்கள் என்பாள் அல்லவா?. லூக் 15:8,9.**

காணாமற்போன ஆடு, அதை எப்படி கண்டுபிடித்தார் என்பதைப் பார்த்தோம். அடுத்ததாக காணாமற்போன வெள்ளிக்காசு. இஸ்ரவேலில் ஒரு பழக்கம் உண்டு, ஒரு மணப்பெண்ணை ஒரு மணமகன் நிச்சயம் செய்யும் போது வெள்ளிக்காசை அவளுக்கு கொடுத்து விட்டு செல்வார்கள். இது நிச்சயிக்கப் பட்ட மணமகன் கொடுக்கிற முதல் அன்பளிப்பு.

அந்த பத்து காசை வாங்கிய நிச்சயிக்கப்பட்ட அந்த மணப்பெண், திருமணம் முடியும் வரை அதை பத்திரமாகப் பாதுகாத்திருக்க வேண்டும். ஏனென்றால் அந்த மணநாள் அன்று மணமகன் கண்டிப்பாய் நிச்சயமாக கேட்பார். நான் கொடுத்த வெள்ளிக்காசு எங்கே என்பார். அதைப் பத்திரப்படுத்தி மீண்டும் அவருடைய கைகளிலே கொடுக்கும் பெண் பாக்கியவதி. ஒருவேளை காணாமற்போனால், தொலைந்து போனால் அந்த திருமணம் நின்றுவிடும். பல வீண் பிரச்சனைகள் ஏற்பட்டு விடும். வெள்ளிக் காசைப் பத்திரப்படுத்தவும், பாதுகாக்கவும் அந்த காலங்கள் நியமிக்கப் பட்டிருக்கும், எப்பொழுது மணமகன் வந்தாலும், எப்பொழுது திருமணம் நடந்தாலும் தன் கையில் அதை பத்திரமாக வைத்திருக்க வேண்டும். அதைப் போலத்தான் நம்முடைய எஜமான், நம்முடைய மணவாளன், நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மை இரட்சித்து, மீட்டெடுத்து காணாமற் போன ஆடுகளாகிய நம்மை மீட்டெடுத்து மந்தையில் சேர்த்து விலையெறப்பெற்ற வெள்ளிக்காசுக்கு ஒப்பாக வைத்திருக்கிறார். நாம் அவருடைய கையில் பத்திரப்படுத்தப்பட்ட, பாதுகாக்கப்பட்ட வெள்ளிக்காசாக இருக்க வேண்டும்.

அடுத்து வெள்ளிக்காசு என்பது என்ன? கர்த்தருடைய வார்த்தை **சங் 12:6-ல் கர்த்தருடைய சொற்கள் மண் குகையில் ஏழுதரம் உருக்கிப் புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்தச் சொற்களாயிருக்கிறது.** கர்த்தருடைய வார்த்தை சுத்த வெள்ளி, சுத்த தங்கம். அந்த வார்த்தையை நம்முடைய உள்ளத்தில், இருதயத்தில் பத்திரமாய் பாதுகாக்க வேண்டும். அதைத்தான் வேதம் சொல்லுகிறது **லூக் 8:15-ல் நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும், நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள்** என்று சொல்லப்பட்டுள்ளது. அந்த தேவனுடைய வார்த்தை தான் நம்மைப் புடமிடும், நம்மை சுத்திகரிக்கும். **சங் 119:72-ல் அநேகமயிரம் பொன், வெள்ளியைப் பார்க்கிலும், நீர் விளம்பின வேதமே எனக்கு நலம்** என்று சொல்லப்பட்டுள்ளது. கர்த்தருடைய வார்த்தை வெள்ளியையும், பொன்னையும் விட மேலானது. அது நம்மைச் சுத்தப்படுத்துகிறது, கண்டித்து உணர்த்துகிறது, மிகுந்த கனிகளைக் கொடுக்கும்படி கொத்தி எருப்போட்டு, நமக்குத் தேவனுடைய வார்த்தையைத் தண்ணீராகப் பாய்ச்சுகிறது. அந்த கர்த்தருடைய வார்த்தை தான் நம்மை பொன்னாக, வெள்ளியாக மாற்றுகிறது. அந்த தேவனுடைய வார்த்தையில் எவ்வளவோ ஆசீர்வாதங்களும், கிருபைகளும் உண்டு. அதை நாம் அனுதினம் தேடி வாசிக்க வேண்டும், தியானிக்க வேண்டும் ஒரு போதகர் வருஷா வருஷம் கன்வென்ஷன் கூட்டம் நடத்துவார். கூட்டம் முடிந்தவுடனே வருகின்ற அவ்வளவு பேருக்கும் உணவு கொடுக்கப்படும். அதற்கு வேண்டிய அசிரி, பருப்பு, ஆடுகள் யாராவது கொண்டு வந்து கொடுத்து விடுவார்கள். கன்வென்ஷன் சிறப்பாக நடந்து முடிந்துவிடும். ஒருமுறை ஒருவர் அவரிடம் 75,000 ரூபாய் கொடுத்து அடுத்த கன்வென்ஷனுக்கு இந்த பணத்தை வைத்துக் கொள்ளுங்கள் என்று கொடுத்து விட்டு சென்றுவிட்டார். அந்த கன்வென்ஷன் நாட்கள் வந்தது. இவரிடத்தில் 75,000 ரூபாய் இருந்தபடியால் எப்படியும் எல்லாம் வந்து விடும் என்று மேலோட்டமாக இருந்து விட்டார். ஊக்கமாக ஜெபிக்கவில்லை. எப்படியோ கஷ்டப்பட்டு கூட்டத்தை நடத்தி முடித்துவிட்டார். எல்லாம் முடிந்த பிறகு அடுத்த நாள் ஆண்டவருடைய பாதத்தில் அமர்ந்து துதித்து, ஜெபித்து நீர் என்னை குறைவில்லாமல் நடத்தினீரே உமக்கு நன்றி என்றார். அப்பொழுது ஒரு தரிசனம் அவருக்கு உண்டானது. ஒரு மலைப்பாம்பு ஆட்டுக்குட்டி ஒன்றை விழுங்கிக் கிடந்தது. அவருக்கு இது ஏன் எனக்குத் தெரிகிறது என்று நினைத்துக் கொண்டே இருக்கும் பொழுது, மெதுவாக ஒரு சத்தம் உண்டானது. உனக்கு, உங்கள் கன்வென்ஷன் கூட்டத்திற்கு வரவேண்டிய ஆட்டை அந்த பாம்பு விழுங்கிக் கொண்டது. காரணம் நீ ஊக்கமாய் ஜெபிக்கவில்லை என்று மென்மையான குரல் உண்டானது. அப்பொழுது அந்த போதகர் தான் கையில் இருந்த 75,000 ரூபாய் வந்தவுடன் திருப்தியாகி ஊக்கமாய் ஜெபிக்காதபடியால் வந்த ஆசீர்வாதத்தை சாத்தான் தடுத்து, மலைப்பாம்பு விழுங்கி விட்டது என்று உணர்ந்தார். அதன் பிறகு ஊக்கத்தோடு, கண்ணீரோடு ஜெபித்தார், பிறகு மகிமையாய், கிருபையாய் சபையை நடத்தி வந்தார். இன்றைக்கு அதைப் போலத்தான் சாத்தான் நமக்கு வர வேண்டிய நன்மைகளை, ஆசீர்வாதங்களைத் தடுத்து, தாமதப்படுத்தி அல்லது விழுங்கி நாம் அனுபவிக்க முடியாமல் செய்கிறான், வைத்திருக்கிறான். இப்படியாகத்தான் பேதுருவுக்கு வரவேண்டிய ஆசீர்வாதத்தை, வெள்ளிப்பணத்தை அவன் விழுங்கி வைத்திருந்தான், தடுத்து வைத்திருந்தான். ஆகவேதான் ஆண்டவராகிய தேவன் வரிப்பணம் செலுத்த காசு இல்லாத போது

**மத் 17:27-ல் நீ, கடலுக்குப் போய் தூண்டில் போட்டு, முதலாவது அகப்படுகிற மீனைப் பிடித்து, அதின் வாயைத் திறந்துபார், ஒரு வெள்ளிப் பணத்தைக் காண்பாய், அதை எடுத்து எனக்காகவும், உனக்காகவும் அவர்களிடத்தில் கொடு என்றார்.** ஆம் இப்படி நமக்கு வரவேண்டிய ஆசீர்வாதங்கள், நன்மைகள், வெள்ளிக்காசை யாரோ எடுத்துக் கொண்டார்கள். அல்லது நாம் அதை தொலைத்து, காணாமற் போகப்பண்ணி, நிர்விசாரமாய் எனக்கென்ன என்று இருந்து விட்டோம். ஒன்பது வெள்ளிக் காசு இருக்கிறது என்று திருப்தியடையாமல், அந்த காணாமற்போன வெள்ளிக்காசை, காணாமற்போன சாந்தகுணத்தை, காணாமற்போன பரிசுத்தத்தை, காணாமற்போன கனிகளைக் கண்டுபிடிக்க வேண்டும். அழுகையோடும், விண்ணப்பங்களோடும் அவர் சமூகத்தில் நம்மைத் தாழ்த்த வேண்டும். அப்பொழுது தேவன் நாம் இழந்ததைப் பெற்றுக் கொள்ளவும், கண்டுகொள்ளவும் நமக்கு கிருபை செய்வார். தேவன் நம்மிடத்தில் கொடுத்த அந்த வெள்ளிக்காசை, நமது மணநாள் வரும் வரை பத்திரமாய் பாதுகாத்து மீண்டும் நாம் அவரிடமே கொடுத்து பாராட்டுப் பெற, பத்திரப்படுத்துங்கள். ஆண்டவராகிய தேவன், நீங்கள் எதையும் இழக்காமல் இருக்க உங்களைப் பாதுகாப்பாராக.

## விளக்கைக் கொழுத்துங்கள், வீட்டைப் பெருக்குங்கள்

**அன்றியும், ஒரு ஸ்திரி பத்து வெள்ளிக்காசை உடையவளாயிருந்து, அதில் ஒரு வெள்ளிக்காசு காணாமற்போனால், விளக்கைக் கொளுத்தி, வீட்டைப்பெருக்கி அதை கண்டுபிடிக்கும் வரைக்கும் ஜாக்கிரதையாய்த் தேடாமலிருப்பாளோ? லூக் 15:8** காணாமற்போனதைத் தேட ஆண்டவர் கற்றுக் கொடுத்த வழி என்ன தெரியுமா? விளக்கைக் கொளுத்த வேண்டும். நம்முடைய ஆத்துமா விளக்கு, கர்த்தர் தந்த தீபம் **நீதி 20:27-ல் மனுஷருடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது. அது உள்ளத்தில் உள்ளவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும்** என்று சொல்லப்பட்டுள்ளது. அந்த விளக்கு இன்றைக்கு எரியாமல் இருளடைந்துள்ளது, நம்முடைய ஆத்துமா, மனம், இருதயம் எங்கே? எப்படிக் கிடக்கிறது என்று தெரியாமல் இருளடைந்தது. குப்பையும், கூளமுமாக அல்லது தூஷியாக எங்கே கிடக்கிறது என்று தெரியாமல் பாழடைந்து கிடக்கிறது. அந்த கீழே விழுந்த வெள்ளிக் காசைக் கண்டுடபிடிக்க, மீட்க, புதைந்து கொண்டிருக்கிற, அனையும் தருவாயில் இருக்கின்ற இந்த விளக்கை சரி செய்ய வேண்டும், பற்றி எரிய வைக்க வேண்டும். அதைத்தான் அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார் 1 தெச 5:19-ல் தேவ ஆவியை அவித்துப் போடாதிருங்கள், அனைத்துவிட வேண்டாம் என்று சொல்லப்பட்டுள்ளது.

நம் விளக்கு எரிந்தால் தான் நம்மிடத்தில் உள்ள விலையெறப்பெற்ற பொருட்கள் பத்திரமாக இருக்கும், பாதுகாப்பாய் இருக்கும். அதுமட்டுமல்ல காணாமற்போனாலும் கண்டுபிடிக்க முடியும். ஆகவே கொளுந்து விட்டு எரியத்தான், பிரகாசிக்கத்தான் ஆண்டவராகிய இயேசு பூமிக்கு இறங்கி வந்தார். பூமியில் அக்கினியைப் போட வந்தேன், தீயை மூட்ட வந்தேன், அது இப்பொழுதே பற்றி எரிய வேண்டும் என்றார். எரிகிற விளக்காய் இருந்தால், விளக்கைக் கொளுத்தினால் கண்டிப்பாய் தொலைந்துபோன, காணாமற்போன வெள்ளிக்காசைக் கண்டுபிடித்து விடலாம். வீட்டைப் பெருக்கி சுத்தம் செய்து குப்பைகளை, தூசிகளை அப்புறப்படுத்தி விடலாம். அதற்குத்தான் விளக்கைக் கொளுத்துங்கள் என்றார்.

சங்கீதத்தில் சங் 119:105-ல் உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆம் தேவனுடைய வார்த்தை, வசனம் நம்முடைய கால்களுக்கு தீபமும், பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. அந்த வசனம் நம்முடைய இருதயத்தில், ஆத்துமாவில் விழும்போது, அது பலனளிக்கும் போது நாம் பெற்ற பரிசுத்த ஆவியானவரைப்பற்றி எரியவும், பிரகாசிக்கவும் நம்மை வைக்கிறது. அப்பொழுது நாம் வீட்டைச் சுத்தம் பண்ணுகிறபோது காணாமற்போன வெள்ளிக்காசை தேடவும், கண்டுபிடிக்கவும் மீண்டும் பெற்றுக் கொள்ளவும் அதின்நிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாகவும், தேவனுக்கு மகிமை உண்டாக்குகிறது. இதினிமித்தம் நாம் மட்டுமல்ல நம்மை சுற்றியிருக்கிறவர்களும் நமக்குள் உண்டாகுகிற மாற்றத்தைப் பார்த்து சந்தோஷமடைந்து தேவனை மகிமைப்படுத்துகின்றனர்.

சமீபத்தில் கிட்னி பழுதடைந்து டயாலிஸிஸ் பண்ணிய சகோதரன் ஆண்டவரை நோக்கி ஜெபிக்க ஜெபிக்க வாரத்தில் மூன்று நாளாக இருந்தது, பிறகு ஒரு நாளாக மாறியது. தற்போது எந்த டயாலிஸிஸ் செய்யாதபடி எல்லாம் நார்மலாக, கிட்னி நல்ல செயல்பட ஆரம்பித்துவிட்டது. என்னோடு அவர் பேசும்போது அவருடைய சந்தோஷத்திற்கு அளவேயில்லை, கர்த்தரை மகிமைப்படுத்திக் கொண்டே இருந்தார். இனி அவருக்காக வாழுவேன், உழைப்பேன், ஊழியம் செய்வேன் என்றார். அதைப் போலத்தான் மனம் திரும்புகிற ஒரு பாவியின் நிமித்தம், காணாமற்போனதைக் கண்டுபிடிக்கிற ஒரு மனிதனின் நிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாகும். என் ஆண்டவராகிய தேவன் தாமே அவர் சமூகத்தில் நீங்கள் வாழ்கின்றவர்களாகவும், பிழைத்திருக்கிறவர்களாகவும் கண்டுபிடிக்கப் பட்டவர்களாகவும் வாழக் கிருபை செய்வாராக. அவரிடத்தில் ஒப்புக் கொடுத்ததை அந்தநாள் வரை காத்து நடத்துவாராக.



# நான் உன்னை

## பலப்படுத்தி, இரட்சித்து திரும்ப நிலைக்கப்பண்ணுவேன்

**சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்! .

கிறிஸ்துவில் பிரியமான சகோதரிகளே, இன்றைக்கு நம்மைப் பலவீனப்படுத்த, நிலைகுலையப்பண்ண நேரடியாகவும், மறைமுகமாகவும் அநேகப் போராட்டங்கள் நமக்கு வருகிறது. அவ்வளவு தான் இனி இவர்களால் எழுந்திருக்க முடியாது என்ற நினைக்கிற மனிதர்கள் அல்லது சாத்தான் வெட்கப்பட்டுப் போகும்படியாய் கர்த்தர் நம்மைப் பெலப்படுத்தி, இரட்சித்து திரும்ப நிலைக்கப்பண்ணுவார். பவுல் வாழ்க்கையில் கப்பற்சேதத்தில் தப்பி கரை சேர்ந்து எல்லாரும் ஒரு தீவில் இறங்கின போது அனலுறைத்து ஒரு சர்ப்பம் பவுலின் கையில் கவ்விக்கொண்டது. அப்பொழுது எல்லாரும் பயந்து இந்த மனுஷன் கொலை பாதகன் இதற்கு சந்தேகமில்லை. இவன் சமுத்திரத்திற்குத் தப்பி வந்தும் பழியானது இவனை பிழைக்க வொட்டவில்லை என்று தங்களுக்குள்ளே சொல்லிக் கொண்டார்கள்.

ஆனால் பவுலோ அந்த பூச்சியை தீயிலே உதறிப் போட்டு ஒரு தீங்கும் அடையாதிருந்தான். அப்பொழுது அந்த தீவார் அவனுக்கு வீக்கங்கண்டு சடுதியாய் சாவானென்று நெடு நேரமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தும் அவனுக்கு ஒரு சேதமும் வராததைக் கண்டு வேறு சிந்தையாகி இவன் தேவனென்று சொன்னார்கள் என்று அப் 28:1-6 வரை வாசிக்கிறோம். அதைப்போல இன்றைக்கு நமக்கும் போராட்டங்கள் வருகிறதா?. இவர்கள் இனி பிழைக்க மாட்டார்கள், எப்படி தப்புவார்கள் பார்த்து விடலாம் என்று நமக்கு விரோதமாய் பேசுகிற, நினைக்கிற, செயல்படுகிற சத்துருவின் சகல சதி ஆலோசனைகளையும் தேவனாகிய கர்த்தர் இயேசுவின் நாமத்தினாலே முறிய அடித்து நம்மைப் பலப்படுத்தி, இரட்சித்து திரும்ப தலைக்கப்பண்ணுகிற ஆண்டவர் நம்மைக் கைவிடமாட்டார் கலங்காதீர்கள்.

**சக 10:6-ல் நான் யூதா வம்சத்தாரைப் பலப்படுத்தி, யோசேப்பு வம்சத்தாரை இரட்சித்து, அவர்களைத் திரும்ப நிலைக்கப்பண்ணுவேன். நான் அவர்களுக்கு இரங்கினேன், அவர்கள் என்னால் ஒருக்காலும் தள்ளிவிடாதவர்களைப் போல் இருப்பார்கள். நான் அவர்களுடைய தேவனாகிய கர்த்தர், நான் அவர்களுக்குச் செவி கொடுப்பேன்** கொடுப்பேன் என்று கர்த்தர் நம்மைப் பார்த்து அருமையான வாக்குத்தத்தத்தைச் சொல்கிறார்.

நான் திரும்ப நிலைக்கப்பண்ணுவேன் என்னும் போது ஏற்கனவே நிலைத்திருந்த ஒன்று ஏதோ காரணத்தால் பாதிப்படைந்து போனது. தாவீது தேவனோடிருந்தவன், ஆனால் ராஜாக்கள் யுத்தத்திற்குப் போகும் காலத்தில் அதைச் செய்யாமல் வேறொன்றை செய்து, உப்பரிகையில் உலாவினதினாலே பத்சேபாளை இச்சித்து பாவம் செய்து அவள் கணவனைக் கொன்றுவிட்டான். இப்பொழுது இவனுக்குள் நிலையான ஆவியானவரை உணர முடியாதவனாய், **உம்முடைய நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும் என்று ஆண்டவரை நோக்கி சங் 51:10-ல் கதறுகிறான்.**

ஆண்டவர் அவனை மன்னித்து திரும்ப அவனை நிலைக்கப்பண்ணினார். நிலைவரமான ஆவியானவர் அவனை புதுப்பித்தார். இன்றைக்கு நம் வாழ்வில் அப்படிப்பட்ட சேதத்தை உணர்ந்தால் ஆண்டவரே! என்னைத் திரும்ப நிலைக்கப்பண்ணும், உமது நிலைவரமான ஆவியை என்னிலே புதுப்பியும் என்று சொல்லுவோமானால் தேவன் நம்மையும் தள்ளமாட்டார், திரும்ப நிலைக்கப்பண்ணுவார். நான் அவர்களுக்கு இரங்கினேன், அவர்கள் என்னால் தள்ளப்படுவதில்லை. நான் அவர்களுடைய தேவனாகிய கர்த்தராயிருந்து, அவர்களுக்குச் செவி கொடுப்பேன் என்கிறார் ஆண்டவர்.

## யூதாவும், யோசேப்பும்

ஆண்டவர், யூதா வம்சத்தார், யோசேப்பு வம்சத்தார் இவர்களைப் பலப்படுத்தி இரட்சித்து திரும்ப நிலைக்கப்பண்ணுவேன் என்று சொல்கிறாரே. யூதா, யோசேப்பு யாக்கோபின் பிள்ளைகள், ஒரு தகப்பன் புத்திரர், அவர்களுக்கு இரங்கினேன் என்றவர் நமக்கும் இரங்குவார். தாய் லேயாள் யூதாவைப் பெற்றெடுக்கும் போது இப்பொழுது கர்த்தரைத் துதிப்பேன் என்று சொல்லி யூதா என்று பெயர் வைத்தாள். யோசேப்பை அவன் தாய் ராகேல் பெற்றெடுக்கும் போது இன்னும் ஒரு குமாரனைக் கர்த்தர் எனக்குத் தருவார் என்று சொல்லி அவனுக்கு யோசேப்பு என்று பெயரிட்டாள். நீண்ட காலம் குழந்தையில்லாமல் இந்த யோசேப்பை ராகேல் பெற்றாள். யூதா என்றால் துதி என்று நமக்குத் தெரியும். இந்த யூதா புறப்பட்ட போது, யாக்கோபின் வாழ்க்கையில் இருந்த எத்தனையோ விதமான தீங்குகள் மறைந்தது. காணாமற்போன யோசேப்பு உயிரோடிருக்கிறான் என்ற செய்தி தெரிய வந்தது. அதுவரை யாக்கோபு அனுபவித்து வந்த எல்லாத் தீங்குகளும் மறையும்படி யூதா புறப்பட்டுப் போனதால் சூழ்நிலைகள் மாறி, யாக்கோபு நிம்மதியாய் வாழ்ந்து, கடைசி மூச்சை கர்த்தரைத் தொழுது கொண்டு மரித்தான். நாமும் எந்த சூழ்நிலையிலும் கர்த்தரைத் துதிக்க ஆரம்பிக்கும் போது நம் சூழ்நிலைகள் மாறும். **இந்த யூதா கோத்திரத்தில் தான் நம் அருமை இரட்சகர் இயேசு பிறந்தார் என்று எபி 7:14-ல் வாசிக்கிறோம். யாத் 35:30-33.... யூதாவின் கோத்திரத்தில் ஊரின் மகனான ஊரியின் குமாரனாகிய பெசலெயேலைப் பேர் சொல்லி அழைத்து, விசித்திரமான வேலைகளை யோசித்துச் செய்ய தேவ ஆவியினால் அவனை நிரப்பினார்.** அதுமட்டுமல்ல யூதாவின் ராஜாக்கள் ஆசாராஜா, யோசபாத்ராஜா தங்கள் இக்கட்டுகளில் தேவனைச் சார்ந்து, அவரை நோக்கி கூப்பிட்டு வெற்றி பெற்றார்கள். சில ராஜாக்கள் தோல்வியடைந்ததுமுண்டு. எண் 13:6-ல் யூதா கோத்திரத்தில் எப்புனேயின் குமாரன் காலேப் இருந்தான் என்று வாசிக்கிறோம். யோசேப்பு என்று பார்க்கும் போது தேவ ஆவியில் நிரம்பினவன். கர்த்தர் அவனோடிருந்தார், கனவுக்கு அர்த்தம் சொல்லும் ஞானம் பெற்றவன். தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகினவன். ஏற்ற காலம் தன்னை கர்த்தர் உயர்த்தும் வரை பொறுமையோடு பாடுகளை சகித்தவன், கர்த்தராலே உயர்த்தப்பட்டவன். தானியங்களைச் சேர்த்து வைத்து பஞ்சகாலத்தில் ஜனங்களுக்கு விற்றவன். தேசங்களுக்கு ஆசீர்வாதமாய் இருந்தவன். தன் தகப்பனை, சகோதரர்கள் குடும்பத்தாரை குறைவின்றிப் போஷித்தவன், எத்தனை விதமான நன்மையான காரியங்கள் நிறைந்தவன். இந்த யோசேப்பின் வம்சத்தில் வந்தவர்களை தேவன் இரட்சிக்க வேண்டுமா? யூதா வம்சத்தாரை ஆண்டவர் பெலப்படுத்த வேண்டுமா? அப்படியானால் அவர்கள் வாழ்வில் வந்த போராட்டங்களும் குறைகளும் என்ன? என்று பார்த்தால் நம் வாழ்வில் அப்படிப்பட்ட நிலைகளை நாம் சீர்படுத்திக் கொள்ளலாம்.

## யூதாவிலும், யோசேப்பிலும் உள்ள குறைகள் என்ன?

யூதா வம்சத்திலும், யோசேப்பின் வம்சத்திலும் பல வெற்றிகளும், நன்மைகளும் இருந்தாலும், தீமைகளும், தோல்விகளும் இருந்தது அதைப் பார்போம். யாக்கோபு நீண்ட காலம் கழித்து பிறந்த யோசேப்பிற்கு பலவர்ண அங்கி ஒன்றை கொடுத்தார். அதன் நிமித்தமும், சூரியனும், சந்திரனும், பதினொரு நட்சத்திரங்களும் என்னைச் சுற்றி வணங்கி நிற்கக் கண்டேன் என்று சொன்னதினிமித்தமும் சகோதரர்களால் பகைக்கப்பட்டான், குழியில் போடப்பட்டான். **ஆதி 37:26,27 அப்பொழுது, யூதா தன் சகோதரரை நோக்கி, நாம் நம்முடைய சகோதரனைக் கொன்று, அவன் இரத்தத்தை மறைப்பதினால் லாபம் என்ன?. அவனை இஸ்மவேலருக்கு விற்றுப் போடுவோம் என்றான்.**

அவன் வார்த்தையில் சகோதரனைக் காப்பாற்றும் எண்ணம் இருந்தாலும், சகோதரனை விற்கிறவனாக யூதா இருந்தான். பொறாமைக் கூட்டத்தில் யூதாவும் இருந்தான். கொன்றுபோடும் கூட்டத்தில் யூதாவும் இருந்தான். **ஆதி 37:25-ல் வாசிக்கும் போது சகோதரனை குழியில் போட்டுவிட்டு போஜனம் பண்ண உட்கார்ந்தார்கள்.** எப்படி முடிந்தது? உடன்பிறந்த சகோதரன் கதறக் கதற, அதைக் கண்டு கொள்ளாத கூட்டம் அதில் யூதாவும் இருக்கிறான். இன்றைக்கு நாமும் கூட இப்படிப்பட்டவர்களாய், சகோதரர்களுக்கு தீங்கு நினைத்து, செய்கிறவர்களாய் இருக்கிறோமா?

**ஆமோஸ் 6:6-ல் பெரிய பாத்திரங்களில் மதுபானத்தைக் குடித்து, சிறந்த பரிமளத்தைலங்களைப் பூசிக்கொள்ளுகிறார்கள். ஆனாலும் யோசேப்புக்கு நேரிட்ட ஆபத்துக்குக் கவலைப்படாமற் போகிறார்கள்.** யார் இவர்கள்? முதல் வசனத்தில் சொல்லப்பட்டுள்ளது சீயோனில் நிர்விசாரமாய் இருக்கிறவர்கள். யோசேப்பைப் பற்றின நினைவில்லாமல் சாப்பிட அமர்ந்தவர்கள். **சக 9:11-ல் தண்ணீரில்லாத குழியிலே அடைபட்டிருக்கிற உன்னுடையவர்களை நான், என் உடன்படிக்கையின் இரத்தத்தினால் விடுதலைபண்ணுவேன்** என்று கர்த்தர் சொல்லுகிறார். யூதா செய்தது போல அவனைக் குழியில் போடுகிறதினால் நமக்கு லாபமென்ன என்று குழியில் இருந்து காப்பாற்றினது போல செயல்படுகிறோமா? ஏதோ, அறியாமலோ அல்லது மற்றவர்களின் சதியிலோ குழியில் கிடக்கிறவர்களை நம்மால் இயன்ற அளவு தூக்க முயற்சிக்கிறோமா? அல்லது குழியில் தள்ளுகிறவர்களாய் இருக்கிறோமா? நம்முடைய ஜெபம், ஆலோசனை அவர்களை வெளியே கொண்டு வருகிறதா? இல்லாவிட்டால் நான் என்ன செய்ய முடியும் என்று இருந்து விடுகிறோமா? தண்ணீரில்லாத குழியில் எந்த நம்பிக்கையும் இல்லாமல் அடைபட்டு விழுந்து கிடக்கிறவர்களை விடுதலை பண்ணுவேன் என்று தான் கர்த்தர் சொல்கிறார். குழியில் இருந்து தூக்கிவிடச் செய்து விட்டு விற்றுவிடக் கூடாது அல்லவா?. ஆதி 38:1 யூதா தன் சகோதரரை விட்டுப் பிரிந்து வேறிடம் போய் விட்டான். இன்றைக்கு எங்கு பார்த்தாலும் பிரிவனை. சொந்தக் குடும்பத்தில் கணவன், மனைவி, பெற்றோர், பிள்ளைகள், உறவுகள், சகோதர, சகோதரர்கள், திருச்சபையில் எத்தனையோ பிரிவுகள், கருத்து வேறுபாடுகள், சுயநலங்கள், யார் பெரியவன் என்ற போட்டிப் பொறாமைகள் நிறைந்திருக்கிறது. இந்தப் பிரிவினையின் நிமித்தமாக அவன் ஆசீர்வதிக்கப்படவில்லை. இந்த ஒரு அதிகாரத்தில் அவனது தோல்வி எழுதப்பட்டிருந்தாலும் அவன் அடைந்த சஞ்சலம், அவமானம், இழப்புகள் அதிகம். **இதோ சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும், எத்தனை இன்பமுமானது?..... அங்கே கர்த்தர் ஆசீர்வாதத்தையும், ஜீவனையும் கட்டளையிடுகிறார் சங் 133:1-3-ல் வாசிக்கிறோம். உபா 33:7-ல்** மோசேயின் மூலமாக தீர்க்கதரிசனமாக முன் நடந்த காரியம் அறிவிக்கப்பட்டதைப் பார்க்கிறோம் **யூதாவைக் குறித்து கர்த்தாவே, யூதாவின் சத்தத்தைக் கேட்டு, அவன் தன் ஜனத்தோடே திரும்பச் சேரப்பண்ணும், அவன் கை பலக்கக்கடவது, அவனுடைய சத்துருக்களுக்கு அவனை நீங்கலாக்கி விடுவிக்கிற சகாயராயிருப்பீராக என்றான்.** அப்படித்தான் ஆண்டவர் செய்வேன், யூதாவை பலப்படுத்தி, திரும்ப நிலைக்கப் பண்ணுவேன் என்கிறார். 2 இராஜா 14:8-ல் அமத்சியா என்னும் யூதாவின் ராஜா, இஸ்ரவேலின் ராஜாவினிடத்தில் நம்முடைய சாமர்த்தியத்தைப் பார்ப்போம் வா, என்று வலிய வம்பிழுத்து நீயா? நானா? பார்த்திடலாம் என்கிறான். தாவீது யூதாவின் ராஜாவான போது மகன் அப்சலோம் எதிராக செயல்பட்டதினால் நாட்டை விட்டு வனாந்தரத்துக்கு போக நேரிட்டது. அப்போது சத்துருக்கள், எதிராய் செயல்பட்டவர்கள் அழிந்த பிறகு வனாந்திரத்தில் இருக்கிற தாவீது ராஜாவை சிங்காசனத்திற்கு அழைத்து வர யூதாவுக்கும், இஸ்ரவேலுக்கும் போட்டி ஏன் எங்களை அழைக்காமல், நீங்கள் மாத்திரம் போய் முந்தி அழைத்து வந்தீர்கள் என்று இஸ்ரவேலர் கேட்டதற்கு 2 சாமு 19:41,42-ல் ராஜா எங்களைச் சேர்ந்தவர் என்று யூதா வம்சத்தார் சொன்னார்களாம். ராஜா எங்க ஆளு!, இன்றைக்கும் இந்த ஜாதிப்பிரிவினைகள் எங்க ஆள்!, எங்களைச் சேர்ந்தவர் என்ற பாகுபாடு இருக்கிறதல்லவா!, மக்கள் செய்ததைக்கூட ஆண்டவர் பெரிதுபடுத்தினாரா? தெரியவில்லை. மக்கள் செய்ததைக்கூட ஆண்டவர் பெரிதுபடுத்தினாரா? தெரியவில்லை. 2 சாமு 24:1-ல் தாவீது மக்களை இலக்கம் பார்க்கச் சொன்னதை ஆண்டவர் விடவில்லை தேவகோபம் வந்தது, கொள்ளை நோய் வந்தது. தாவீது தேவசமூகத்தில் குப்புற விழுந்தான், இரக்கத்தைப் பெற்றான். யோசேப்பு வம்சத்தாரைப்பற்றி நியா 1:27-ல் மனாசே கோத்திரத்தார் கானானியரைத் துரத்திவிடவில்லை, அவர்கள் அங்கே குடியிருந்தார்கள். விக்கிரகக்கிரியைகள், பாரம்பரியங்கள், சடங்காச்சாரங்கள் இவைகளுக்கு

இடம் கொடுத்து வாழ்ந்தார்கள். யோசு 16:9,10-ல் எப்பிராயீம், மனாசே புத்திரர், யோசேப்பின் வம்சம் இவர்கள் கானானியரை துரத்தாமல் உலகம், மாமிசம், பிசாசின் கிரியைகளுக்கு இடம் கொடுத்து வாழ்ந்தார்கள். 2 நாளா 31:1-ல் யூதா பென்யமீன் எங்கும், எப்பிராயீமிலும், மனாசேயிலுங்கூட உண்டான சிலைகளை உடைத்து, பீடங்களையும் இடித்து அவைகளையெல்லாம் தகர்த்துப் போட்டார்கள். அவர்களுக்குள்ளே சிலைகள், விக்கிரகத் தோப்புகள் இருந்திருக்கிறது. ஏசாயா 9:21-ல் மனாசே எப்பிராயீமையும், எப்பிராயீம், மனாசேயையும் பட்சிப்பார்கள். இரண்டு பேரும் அண்ணன் தம்பி. ஒருவரையொருவர் பட்சிக்கிற, சகோதர சிநேகம் இல்லாமல் இருக்கிறார்கள். ஓசியா 11:12-ல் எப்பிராயீமர் பொய்களினாலும், இஸ்ரவேல் வம்சத்தார் வஞ்சகத்தினாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறார்கள் என்று ஆண்டவர் சொல்கிறார். உமக்காக வாழ்வேன் என்பது, வாழாமல் இருப்பது, உமது கட்டளைகளை நிறைவேற்றுவேன் என்பது கடைபிடிக்காமல் இருப்பது, பொய், வஞ்சகம், உண்மையாய் இருப்பது போல காண்பித்து போலியாய், பொய்யாய் வாழ்வது. ஓசியா புத்தகத்தில் எப்பிராயீமைப் பற்றி உன்பக்தி காலையில் காணும் மேகத்தைப் போல் இருக்கிறது. நீ திருப்பிப் போடாத அப்பம், அந்நிய ஜனங்களோடே கலந்திருக்கிறான் என்று அங்கலாய்க்கிறார். இவைகளில் நிறைந்திருக்கிற யோசேப்பு வம்சத்தாரை, யூதாவை ஆண்டவர் இரட்சிக்க வேண்டுமே! பெலப்படுத்த வேண்டுமே!.

## தேவனுடைய இரக்கம்

எப்பிராயீமே! நான், உன்னை எப்படிக் கைவிடுவேன்?..... என் உக்கிர கோபத்தின்படியே செய்யமாட்டேன். எப்பிராயீமை அழிக்கும்படித் திரும்ப மாட்டேன், ஏனென்றால் நான் மனுஷனல்ல, தேவனாயிருக்கிறேன். நான் உன் நடுவிலுள்ள பரிசுத்தர், ஆகையால் பட்டணத்துக்கு விரோதமாக வரேன் ஓசி 11:8,9. தேவனுடைய மகாப்பெரிய இரக்கம் எவ்வளவு பெரியது. நான் யூதா வம்சத்தாரைப் பலப்படுத்தி, யோசேப்பு வம்சத்தரை இரட்சித்து திரும்ப நிலைக்கப்பண்ணுவேன் என்றாரே என்ன நடந்தது? ஆதி 44:14,16-ல் யூதாவும், அவன் சகோதரரும் யோசேப்புக்கு முன்பாகத் தரையிலே விழுந்தார்கள். யோசேப்பு நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்பிடப்படுகிறார். வசனம் 33-ல் என் சகோதரனுக்குப் பதில் நான் அடிமையாய் இருக்கிறேன் என்று தன்னைத் தாழ்த்தினான். அதனால் எல்லா சகோதரர்களுக்கும் முன் நடக்கச் செய்தார் ஆண்டவர். சங் 18:43-ல்.......ஜாதிகளுக்கு என்னைத் தலைவனாக்குகிறீர் என்ற வார்த்தையின்படியே தாவீதை, யூதாவை தேவன் உயர்த்தினார். ஓசி 14:8-ல் இனி எனக்கும், விக்கிரகங்களுக்கும் என்ன என்று எப்பிராயீம் சொல்லுவான், எனக்கும் உலகத்துக்கும், விக்கிரகங்களுக்கும், தீமையான பாவங்களுக்கும் தொடர்பில்லை என்று துண்டித்துக் கொண்டான். அதனால் எரே 31:18-20-ல் நீர் என்னைத் தண்டித்தீர், நான் பணியாத மாடுபோல் அடிக்கப்பட்டேன்.... மனஸ்தாபப்பட்டுக் கொண்டிருக்கிறேன் என்று எப்பிராயீம் துக்கித்து புலம்பிக் கொண்டிருக்கிறதை நிச்சயம் கேட்டேன் என்கிறார். இதினிமித்தம் தேவன் இரங்கினார். இதைப்போல நாமும் தேவனிடம் முகங்குப்புற விழுந்து தாழ்த்தினால் நிச்சயமாக நம்மை பலப்படுத்தி, இரட்சித்து திரும்ப நம்மை நிலைக்கப்பண்ணுவார். ஆண்டவர் இயேசு நம் ஒவ்வொருவரையும் திரும்ப நிலைக்கப்பண்ணுவாராக!.








# நான் ஏன் வாழ்கிறேன்? வாழ வேண்டும்?

சகோதரி. பிரேமாடேவிட்

**எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும், பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம். இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான், பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின. 2 கொரி 5:14-17**

கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிபத்தம்பி, தங்கைகளே, நம் மேல் அன்புகூர்ந்து, நமக்காக தம் இரத்தத்தையெல்லாம் சிந்தி, நம் பாவங்களறக் கழுவி, தம் பிள்ளைகளாக நம்மை ஏற்றுக்கொண்ட ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இன்றைக்குப் பெரியோர், சிறியோர் என்ற வித்தியாசமில்லாமல், நான் ஏன் வாழ்றேன், எதுக்கு வாழ்றேன்னு அர்த்தம் தெரியாமலே வாழ்ந்து விட்டேன். அவர்கள் என்னைத் திட்டி விட்டார்கள், அவள்(ன்) என்னை ஏமாற்றி விட்டான், இனிமே அவ்வளவு தான் என்னால ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாது, வாழவே பிடிக்கல, இருக்கிறதற்கு சாகலாம் என்று விரக்தியில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் ஒரு சிலர் தற்கொலை செய்ய துணிந்து தங்கள் வாழ்க்கையையே அழித்துக் கொள்கிறார்கள்.

## நீ எனக்காக வாழ வேண்டும்

இதை வாசிக்கிற நீங்களோ, உங்கள் நண்பர்களோ இது போல சொல்லிக் கொண்டிருக்கிறீர்களா? உங்களைப் பார்த்து தான் ஆண்டவர் சொல்லுகிறார். உன்னை, உங்களை வாழ வைக்கும்படியாக நான் மரித்து விட்டேன். நீங்கள் இனி உங்களுக்காகவும் வாழ வேண்டாம், இந்த உலகத்துக்காகவும் வாழ வேண்டாம், உங்களுக்காக, உனக்காக வாழாமல், உங்களுக்காக, நமக்காக மரித்து எழுந்தவருக்காக வாழ வேண்டும், வாழத்தான் வேண்டும். நீங்கள் கெட்டுப் போகக்கூடாது, அழிந்து போகக்கூடாது, சாகக்கூடாது என்பதற்காகத் தானே (யோவா 3:16) **நான் மரித்து விட்டேன், பின்னே நீ, ஏன் சாக வேண்டும்** நீ, நீங்கள் அந்த தப்பையே நினைத்து, குற்ற உணர்விலே இன்னும் எத்தனை நாளைக்கு அழுது கொண்டிருப்பீர்கள், கர்த்தருக்காக நான் இதைச் செய்யலையே, அதைச் செய்யாமல் விட்டுட்டேனா, என் நேரம், பெலன், பணம், திறமை எல்லாத்தையும் வேஸ்டு பண்ணிட்டேனே, இனி நான் இருந்து என்ன பிரயோஜனம், என்ன புண்ணியம் என்று புலம்பிக் கொண்டிருக்கிற உங்களைப் பார்த்து தான், உனக்கு, உங்களுக்குப் பதிலாக நான் மரித்து விட்டேன். இப்ப எனக்குப் பதிலாக நீ, நீங்கள், உங்களுக்காக மரித்து எழுந்த எனக்காக வாழ வேண்டும் என்று சொல்லுகிறார். அவரைப் பார்த்து நீங்கள் சொல்லுங்கள், இயேசப்பா, நீங்க எனக்காகத்தான் சிலுவையில் மரித்து உயிரோடு எழுந்தீங்கனு, நான் நம்புறேன், விசுவாசிக்கிறேன். என் பாவங்களைக், குற்ற உணர்வுகளை உங்க இரத்தத்தால் கழுவி என்னைய உங்கபிள்ளையா ஏற்றுக்கொள்ளுங்கப்பா, என் உள்ளத்திற்குள்ள வாங்க இயேசப்பா. என் தகப்பனாக, என் தெய்வமாயிருந்து என்னை வழிநடத்துங்க என்று சொல்லுங்கள். உடனே அவருடைய அன்பினால் உங்களை அணைத்துக் கொண்டு, அவருடைய வார்த்தையால் ஆற்றித் தேற்றி, அவர் கரத்தினால் உங்களை அருமையாய் வழிநடத்துவார். இனி நீங்கள் கலங்காமல், பயப்படாமல் இந்த உலகத்திலே இயேசுவுக்காக தைரியமாக வாழ முடியும், வாழ வேண்டும்.

## எப்படி வாழ வேண்டும்

இயேசுவுக்காக எப்படி வாழ வேண்டும், இயேசுவுக்காக வாழ உங்கள் இருதயத்தை,

வாழ்க்கையை அவருக்கு நீங்கள் கொடுத்து விட்டதால் இப்பொழுது நீங்கள் கிறிஸ்துவுக்குள் வந்து விட்டீர்கள். கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்கள். இயேசப்பாவும் உங்கள் உள்ளத்திலே வந்து விட்டதால் அவரும் உங்களுக்குள்ளே இருக்கிறார். இயேசு உங்கள் உள்ளத்தில் வருவதற்கு முன்னே இருந்த பழைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு விட்டது. அவருக்காக வாழ நீங்கள் ஒரு புதுச்சிருஷ்டியாக, மனிதனாக மாற்றப்பட்டு விட்டதால்

## முதலாவதாக

இனிமேல் அருவருப்பான பழைய அந்த....பாவங்கள் உங்கள் சிந்தைக்குள், பார்வை, பேச்சு, செயல் வழிகளில் வராமல் காத்துக் கொள்ள வேண்டும். ஒருவேளை, ஒரு நேரம் தவறினால் உடனே மன்னிப்பு கேட்டு அடுத்து அதைச் செய்யமால் இருக்க ஆண்டவரிடம் உதவியைப் பெற்றுப் பாவத்தைச் ஜெயிக்க வேண்டும். அசுத்தமான, தீமையான, கேடான அந்த திசைக்குச் செல்லாமல் அதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். வரவிடாமல் தடுக்க என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும்.

## அடுத்ததாக

இயேசப்பா பழைய பாவங்களை மன்னித்து, ஒழிந்து போகச் செய்தது மட்டுமல்லாமல் அவருக்காக ஒரு புது வாழ்க்கை வாழ்வதற்குத் தேவையான எல்லா ஆதாரத்தையும், உதவியையும் அவரே கொடுக்கிறார். ஒருவருக்கு ஒரு லட்சம் ரூபாய் கடன் இருக்குது என்றால் அதை உறவினர் ஒருவர் அடைத்து விட்டு, இனிப் புதிதாய் ஒரு தொழில் துவங்க இன்னும் ஒரு லட்சம் ரூபாயும் கொடுக்கிறார் என்றால் எவ்வளவு சந்தோஷம், அதைப் போலத்தான் ஆண்டவரும் பாவக்கடன்களை தமது இரத்தத்தினால் அடைத்து, புதிதாக ஒரு வாழ்க்கை வாழத் தேவையான ஞானம், பெலன், ஆலோசனை, உடல் ஆரோக்கியம், தயவு, உதவி, பொருளாதார உதவி பாதுகாப்பு அனைத்தையும் உங்களுக்குத் தருகிறார். அவருடைய வார்த்தையைப் படித்து, அதைக் கேட்டு அதின்படி நடக்கும் போதும், ஜெபத்திலே அவரோடு பேசி, அவர் பேசுவதை நாம் கேட்டு, அவரை விட்டுப் பிரியாமல் வாழத்துவங்கும் போது அவையனைத்தும் நமக்குக் கிடைக்கும். நாம் இனி அதைத் தேடிப் போக வேண்டியதில்லை. நான் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டி, இனி பழைய பாவத்திற்கு என்னை கூப்பிடும் நண்பர்கள், அந்தப் பொருள்...., அதுவா .... வேண்டவே வேண்டாம் என அதை வெறுத்து வந்து விடுவீர்கள். கசப்பாகவும், கடினமாகவும் இருந்த ஜெபம், பைபிள் சபை உங்களுக்குப் இப்பொழுது பிரியமாயிருக்கும். செல்போனும் கையுமாக இருந்த போது எதற்கெடுத்தாலும் கோபம், டென்ஷன் எல்லாம் மாறி, இப்ப கொஞ்சம் கொஞ்சமாக நிதானம், பொறுமை, இப்ப உங்களை, உங்க குடும்பத்தில, கல்லூரியில பார்க்கிறவங்க என்ன பழைய ஆளுதான், ஆனா புதுசா இருக்கிறானே(ளே) என்று சொல்லுமளவிற்கு எல்லாம் புதிதாகும். நீங்கள், உங்களுக்காக வாழாமல் கிறிஸ்துவுக்காக வாழ்வீர்கள்.

வேதத்தில் (அப் 9) பவுல் 13 நிருபங்களை எழுதியவர். தேவனால் அப்போஸ்தலராக தெரிந்து கொள்ளப்பட்டவர். ஆனால் அவர் கிறிஸ்துவுக்காக வாழ்வதற்கு முன் தன்னுடைய மதத்தின் கொள்கைக்காக வாழ்ந்தவர். சிறுவயதிலிருந்தே வேதத்தை முறைப்படி கற்றவர். ஞானமும், அறிவும், அதிகாரமும், அந்தஸ்தும், ஆஸ்தியும் உடையவராயிருந்தார். மதவைராக்கியத்திற்காக, இயேசுவைப் பின்பற்றினவர்களை துன்புறுத்துவதும், சிறையில் அடைப்பதும், கொலை செய்வதும் தான் அவருடைய மேன்மையான செயலாய், வாழ்க்கையாகவே இருந்தது. அப்படி ஒருநாள் தமஸ்கு நகருக்கு அதை செய்வதற்காக அவர் சென்று கொண்டிருக்கும் போது தான் இயேசு அவரைச் சந்தித்தார். அவரும் உடனே தன்னை ஆண்டவருக்கு ஒப்புக் கொடுத்தார். பழையது எல்லாம் ஒரு நிமிஷத்திலே, ஒரே நாளிலே மாறி விட்டது. இப்ப எல்லாம் அவருடைய வாழ்க்கை புதிதாக மாற ஆரம்பித்து விட்டது. கிறிஸ்து அவருக்குள் வந்துவிட்டதால் தான் இந்த மாற்றம். அடிதடி கொலை வெறியோடு இருந்தவர். இப்ப ஜெபம் பண்ணிக் கொண்டிருக்கிறார். என்று ஆண்டவரே அனனியாவிடம் சொல்லுமளவிற்கு மாற்றம். எனக்காக மரித்து எழுந்த கிறிஸ்துவுக்காக வாழ வேண்டும் என்று வாழத் துவங்கிவிட்டார்.

இயேசுவின் சீடர்கள் பயப்படுகிறார்கள். நேற்று வரை எல்லாரையும் சிறையில் அடைத்தவன், ஆனால் அதற்குள்ளாக எப்படி இந்த மாற்றம். ஆண்டவர் இயேசு ஒருவனுக்குள் வந்துவிட்டால் அவன் வாழ்க்கைக்கான நோக்கம் புரிந்து விடும். வாழ்ந்தால் அவருக்காகத் தான் வாழ வேண்டும் என்ற எண்ணமும், மாற்றமும் வந்துவிடும். அப்படித்தான், அதுவரை சவுலாக இருந்தவர் பவுலாகத் தேவனுக்காக வாழத் தெரிந்து கொள்ளப்பட்டு தேவனுக்காகவே வாழ்ந்தார். கர்த்தர் தாமே அவருக்காக வாழத் தேவையான கிருபைகளையும், வல்லமைகளையும் உங்களுக்குத் தந்து, உங்களை வாழ வைப்பாராக!.

சிறுவர் பகுதி

# நன்றி சொல்லாமல் இருக்கவே முடியாது

ஹலோ குட்டீஸ் நல்லாயிருக்கீங்களா?

இந்த மாதம் பத்தாவது மாதம் தானே, என்ன மாதம்? ஆமா, ஆமா..... நீங்க அக்டோபர்னு சொல்றது நல்லா கேட்குது. பத்துனு சொல்லும் போதே பைபிள்ல பத்துப்பேர் குஷ்டரோகத்திலிருந்து (தொழுநோய் — தோல் சம்மந்தப்பட்ட வியாதி) சுகமானது தான் ஞாபகத்திற்கு வருகிறது.

இயேசப்பா ஒரு நாள் ஒரு கிராமத்து வழியாய் எருசலேமுக்குப் போய் கொண்டிருக்கும் போது பத்துப்பேர் அவருக்கு கொஞ்சதூரமா நின்று இயேசய்யா எங்களுக்கு இரங்கும், எங்களுக்கு உதவி செய்யுங்க என்று சத்தம் போட்டுக் கூப்பிட்டார்கள். அந்தக்காலத்தில் குஷ்டரோகம் ஒருத்தருக்கு வந்துருச்சுனா அவங்க வீட்டுல உள்ளவர்களோடே ஒன்னா இருக்கக் கூடாது. ஊருக்கு வெளியில, கூடாரங்களிலும், குகையிலும், மலை அடிவாரங்களிலும் தான் இருப்பாங்க. அவங்க வீட்டைச் சேர்ந்தவங்களோ, மற்றவங்களோ கொடுக்கிற சாப்பாட்டைத் தான் சாப்பிடுவாங்க. கொஞ்சநாள் கழிச்சு அவங்க உடம்பு சரியாயிருச்சனு தேவாலயத்திலிருக்கும் ஆசாரியர்களிடம் (ஊழியர்கள்) காண்பிச்சதிற்கு அப்புறம் தான் அவங்க வீட்டிற்குப் போக முடியும். உடம்பு சரியில்லாம, சரியா சாப்பிடாம, வீட்டுல உள்ளவங்கள பார்க்காம இருந்ததைவிட கொடுமையான விஷயமும் இருந்துச்சு. ஊருக்கு வெளியில அவர்கள் நடந்து கொண்டிருக்கும் போது மற்றவர்கள் இவர்கள பார்த்தவுடனே விலகிப் போயிடுவாங்க அல்லது இவங்க தீட்டு, தீட்டுனு சத்தமாய்ச் சொல்லனும். (லேவி 13:45)

இப்படித்தான் சத்தமாய்க் கூப்பிட்டுக்கிட்டே இருந்த இவங்கள்ல, பத்துப்பேர் இயேசப்பாவைப் பார்த்தவுடனே தூரமாய் நின்று கொண்டு இயேசய்யா எங்களை சுகமாக்குங்கன்னு சத்தமிட்டு கத்தினார்கள். உடனே இயேசப்பா நீங்க போய் ஆசாரியர்களிடத்தில் உங்களைக் காண்பியுங்கள் என்றார். அவர்களும் அப்படியே நம்பிப் போய்க் கொண்டிருக்கும் போதே சுகமாயிட்டாங்க.அந்த பத்துப்பேரில் ஒருத்தர் மட்டும், இதுவரைக்கும் தீட்டு தீட்டுனு கத்தினவர், கொஞ்ச நேரத்திற்கு முன்னாடி இயேசப்பா உதவி செய்யுங்கனு கத்தினவர், இப்ப நன்றி இயேசப்பா நன்றி நன்றி என்னை சுகமாக்கிட்டீங்க உங்களுக்கு நன்றினு ரொம்ப சத்தமாய் கத்திக்கிட்டு வந்து இயேசப்பாவுடைய காலில் விழுந்து நன்றி சொன்னார். அவரைப் பார்த்து இயேசப்பா பத்துப்பேர் சுகமானாங்களே மற்ற ஒன்பது பேர் எங்கே? தேவனை மகிமைப்படுத்த, நன்றி சொல்ல இவர் மட்டும் தானே வந்திருக்காரு, மற்றவங்களை எங்கே? வரலையேனு கேட்டார். இவரைப் பார்த்து நீ, எழுந்து உன் வீட்டுக்குப் போ, உன் விசுவாசம் உன்னைக் குணமாக்கியது என்று ஆசீர்வதித்து அனுப்பினார். என்ன குட்டீஸ் நீங்க இயேசப்பா கிட்ட கேட்டது கிடைக்கும் போது நன்றி சொல்லிருக்கீங்களா? நன்றி சொல்ல மறவாதீங்க. நன்றி சொல்லாமல் இருந்தா அது இயேசப்பாவை துக்கப்படுத்தும். அதோட நம்ம நன்றி சொன்னாதான் நமக்கு கிடைச்ச ஆசீர்வாதம் நிலைக்கும். ஓகே குட்டீஸ் உடனே ஓடிப் போய் சத்தமா இயேசப்பாவுக்கு நன்றி சொல்லுங்க.

*ஜெபம்* அன்புள்ள இயேசப்பா என்னை மன்னியுங்க. நானும் நிறைய தடவை நன்மைகளை மட்டும் வாங்கிக் கிட்டு நன்றி சொல்லாமல் இருக்கிறேன். இயேசப்பா நீங்க எனக்கு செஞ்ச எல்லா உதவிக்காகவும் நன்றி இயேசப்பா. இனி நான் நன்றி மறக்காம தினமும் ஜெபத்திலும் நன்றி சத்தமா சொல்ல கிருபை செய்யுங்க. இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.



*மனப்பாட வசனம்*

நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள். கொலே 3:15

# பரிகாரியாகிய தேவனின் அற்புதங்கள் சில.....



சாட்சி பகுதி

**சகோதரர். பாண்டியன்**

என் சரீரசுகத்திற்காக, நான் நன்றாக நடக்க, முடக்குவாதம் குணமாக எனக்காக ஜெபிக்குமாறு தங்களது கர்த்தாவே என்னை கைதூக்கி விடும் என்ற நேரலை நிகழ்ச்சியில் ஜெபக்குறிப்பு அனுப்பி ஜெபிக்க கேட்டுக் கொண்டேன். தாங்கள் எனக்காக தொடர்ந்து ஜெபித்ததின் பலனாக நான் தற்போது முடக்குவாத நோயிலிருந்து பரிபூரண சுகத்தைப் பெற்றுள்ளேன். எனக்காக ஜெபித்த உங்களுக்கு நன்றி. எனக்கு பூரணசுகத்தை தந்து என்னை சாட்சியாக நிறுத்தின தேவனுக்கு ஸ்தோத்திரம்.

**சகோதரி. அருள்சீலி - நாகர்கோவில்**

என் பேரக்குழந்தை சுகவீனத்தினால் மிகவும் கஷ்டப்பட்டான். அவன் சரீரசுகத்திற்காக ஜெபிக்குமாறு தங்களுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஜெபிக்க கேட்டேன், தாங்களும் பாரத்தோடு ஜெபித்தீர்கள் தேவன் ஜெபத்தைக் கேட்டு மறுநாளே என் பேரனுக்கு பரிபூரண சுகத்தை தந்தார். தற்போது நல்ல சுகத்தோடு, பெலத்தோடு இருக்கிறான். சுகம் தந்த தேவனுக்கு நன்றி.

**சகோதரி. ஜோஸ்பின்மேரி - திருச்சி**

என் மகனுக்கு ஒரு வீட்டைக் கட்ட வேண்டும் என்றும், தேவன் தேவைகளை சந்திக்க வேண்டும் என்றும் வானத்தின் வாசல் உபவாச ஜெபத்திற்கு வந்து ஜெபக்குறிப்பு எழுதிக் கொடுத்துவிட்டு சென்றேன். தேவன் அற்புதமாக வீட்டைக் கட்டிமுடிக்க கிருபை செய்தார். அவருக்கே மகிமை. என் இளையமகன் கீழே விழுந்து காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு மிகவும் கஷ்டப்பட்டான். அவன் விரைவில் சுகமாகவும், மீண்டும் நன்றாக நடக்கவும் ஜெபிக்குமாறு தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஜெபிக்க கேட்டேன். சகோதரி அவர்கள் என் மகன் சரீரசுகத்திற்காக ஜெபித்தார்கள். தற்போது அவன் நல்ல சுகத்தோடு, நடக்க தேவன் பெலனும், கிருபையும் தந்தார். என் தேவாதி தேவனுக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்



# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார்.அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார் (1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

| | | | |
|---|---|---|---|
| A/C NAME | : JESUS LIVES TRUST | A/C NAME | : L.VINCENT RAJ |
| BRANCH | : KOCHADAI MADURAI | BRANCH | : MADURAI |
| BANK NAME | : UNION BANK OF INDIA | BANK NAME | : AXIS BANK |
| A/C.NO | : 493902010001022 | A/C.NO | : 109010100247030 |
| IFSC CODE | : UBIN0549398 | IFSC CODE | : UTIB0001765 |

## 2) இணையதளம்(WEBSITE)

WWW.JESUSLIVES.IN

## 3) காசோலை(CHEQUE)

JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

## 4) GOOGLE PAY

: GPAY(GOOGLE PAY)TO , 944 300 9333 ,7598359316

**5) மணியார்டர்(E.M.O) :** இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் 54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர், ஏ – காலனி பரவை ,மதுரை – 625 402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது **GOOGLE PAY** மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை **944 28 00 449** என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு **WHATSAPP** மூலமாகவோ, **accounts@jesuslives.in** மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

# நடப்பு செய்திகள்

## நாம் அதிகம் கவனிக்காத புற்றுநோயின் 10 அறிகுறிகள் என்னென்ன?

புற்றுநோய் என்ற வார்த்தையைக் கேட்டால், அனைவருக்கும் அபாயகரமான விளைவுடன் கூடிய ஒரு ஆபத்தான நோய்தான் நினைவுக்கு வரும். ஆனால் 1970-களில் இருந்து, புற்றுநோயிலிருந்து பிழைத்து உயிர்வாழும் மனிதர்கள் விகிதம் மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. இதற்குக் காரணம் ஆரம்பக் கால நோயறிதல் தான். உண்மையில், பெரும்பாலான புற்றுநோய்கள் அதிகமாக வளர்ச்சியடைவதற்கு முன்பே கண்டறியப்பட்டால், சிகிச்சையளிக்கப்படக்கூடியவை.

1. காரணமில்லாத உடல் எடை இழப்பு - புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான மக்கள் ஒரு கட்டத்தில் உடல் எடையை இழக்கின்றனர்.
2. அடிக்கடி காய்ச்சல் - புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு காய்ச்சல் வருவது மிகவும் பொதுவானது. புற்றுநோய் தொடங்கிய இடத்திலிருந்து பரவ ஆரம்பித்தப் பிறகு இது அடிக்கடி நிகழ்கிறது.
3. தீவிரமான உடல் சோர்வு - ஓய்வெடுத்தாலும் தீராத தீவிரமான உடல் சோர்வும் ஒரு அறிகுறி. புற்றுநோய் பரவும்போது இது ஒரு முக்கியமான அறிகுறியாக இருக்கலாம்.
4. தோலில் ஏற்படும் மாற்றங்கள் - தோல் புற்றுநோய்களுடன், வேறு சில புற்றுநோய்களும் வெளிப்படையாகத் தெரியும் தோல் மாற்றங்களை ஏற்படுத்தும்.
5. மலம் அல்லது சிறுநீர் கழிக்கும் பழக்கத்தில் மாற்றங்கள் - மலச்சிக்கல், வயிற்றுப்போக்கு அல்லது உங்கள் மலத்தின் அளவு நீண்ட காலமாக மாறுவது பெருங்குடல் புற்றுநோயின் அறிகுறியாக இருக்கலாம்.
6. ஆறாத காயங்கள் - ஆனால் நான்கு வாரங்களுக்கு மேல் குணமடையாத சிறிய காயங்கள் குறித்தும் நாம் கவனமாக இருக்க வேண்டும். ஆறாத வாய்ப் புண் வாய்ப் புற்றுநோயின் அறிகுறியாக இருக்கலாம்.
7. இரத்தப்போக்கு - புற்றுநோயுடன் ஆரம்ப அல்லது மேம்பட்ட நிலைகளில் அசாதாரண இரத்தப்போக்கு ஏற்படலாம். இருமும் போது இரத்தம் வருவது நுரையீரல் புற்றுநோயின் அறிகுறியாக இருக்கலாம்.
8. உடலில் தடிப்பு அல்லது கட்டிகள் - பல புற்றுநோய்களை தோலில் ஏற்படும் மாற்றங்கள் மூலம் உணர முடியும். இந்தப் புற்றுநோய்கள் முக்கியமாக மார்பகங்கள், விரை, நிணநீர் கணுக்கள் (சுரப்பிகள்) மற்றும் உடலின் மென்மையான திசுக்களில் ஏற்படுகின்றன.
9. விழுங்குவதில் சிரமம் - தொடர்ந்து அஜீரணம் அல்லது விழுங்குவதில் சிரமம் இருந்தால் அது உணவுக்குழாய், வயிறு அல்லது குரல்வளை (தொண்டை) புற்றுநோயின் அறிகுறிகளாக இருக்கலாம்.
10. தொடர் இருமல் அல்லது தொண்டை கரகரப்பு -தொடர் இருமல் நுரையீரல் புற்றுநோயின் அறிகுறியாக இருக்கலாம். மூன்று வாரங்களுக்கு மேல் இருமலால் பாதிக்கப்பட்டிருந்தால், மருத்துவரை அணுகுவது நல்லது.

Owned & Published by: Bro.L.VincentRaj , & Editor Bro.L.VincentRaj
Published by Jesus Lives Trust, Yesuvai Thinam Parkiren
54,A.I.B.E.A-Nagar,Paravai,Madurai - 625402
Printed by: C.CHELLACHAMY,PRISM PRINTERS,Madurai



செம்பட்டியில்
இயேசுவின் பாதத்தில்
அக்டோபர்
14 வெள்ளிக்கிழமை
@10:00Am
இடம்
வானத்தின் வாசல்,
எழுப்புதல் ஜெப மையம்,
செம்பட்டி, திண்டுக்கல்
ஆசீர்வாத உபவாச
ஜெபம்
அக்டோபர்
15
சனிக்கிழமை
@10:00Am




மதுரை மாவட்ட அனைத்து திருச்சபைகள் மற்றும்
இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் இணைந்து நடத்தும்
மதுரையில் எழுப்புதல்
உபவாச
ஜெபம்
அக்டோபர்
21
9:00am
to
2:00pm
சனிக்கிழமை
இடம்
இயேசு அழைக்கிறார் ஜெபகோபுரம், பைபாஸ் ரோடு,
பழங்காநத்தம், PRC Depot அருகில், மதுரை
வந்து பாருங்கள் !!
இயேசு அற்புதம் செய்கிறார் !!
தொடர்புக்கு
94428 00449, 94980 00449

Date of Publication on 20th (Every Month)
RNI NO .TNTAM/2000/00621 Postal Registration No. TN/MA/42/2021-2023
WPP Registration No. TN/WPP-40/SR/2021-2023
Date of Posting 27th (Every Month) Posted at Madurai R.M.S




If Undelivered (Please Return To)
YESUVAI THINAM PARKIREN
54,A.I.B.E.A Nagar,Parvai
Madurai-625402
South India.